புதினப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பெற்றது.

# இந்துசாதனம்.

விரோதி ௵ (1889) ஆவணி மீ ௨௨ உ ஆரம்பமானது.

## THE HINDU ORGAN.

### குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரிகை கிரயம்.
(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)
யாழ்ப்பாணப்பட்டினம்: ஆண்டு ௧-க்கு ரூ. ௨-௨-௦.
வெளியூர், இந்தியா: ,, ரூ. ௩-௦-௦.
தொலைவாய்ப்பகுதி: ,, ரூ. ௩-௮-௦.
தனிப்பிரதி சதம் -௦௬.

விளம்பர விகிதம்.
| | | ரூ. ச. |
|---|---|---|
| முதன்முறைக்கு:— | ஒருகலம் | ௫-௦௦. |
| ,, | அரைக்கலம் | ௩-௦௦. |
| ,, | கால்கலம் | ௨-௦௦. |
| ,, | ஒருஅங்குலம் | -௫௦. |

அடுத்தமுறைகட்கு விகிதங்களில் அரைவாசி

புத்தகம் - ௨௮. { யாழ்ப்பாணம்:—நளஸு ஆனிமீ ௨௰௩ உ ௧௯௧௬-ம் ஆ ஜூலைமீ ௬ உ. } இலக்கம்—௧.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிழ வுணர்ச்சி மீதழுச சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப் பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வதிவிச்சை தொழிலெண் ணேறு மதம்பூத்த விநாயகன்றன் வனசந் தாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக,
ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


விளம்பரம்.

THE CHEAPEST HOUSE
FOR HIGH CLASS SILK CLOTHS.

நம்பிக்கையும், நாணயமும், சகாயமுமான பட்டு வர்த்தகசாலை எது?

காசியிற் பிரபல பட்டுவர்த்தகர்களாகிய
கே. எஸ். முத்தையா கம்பெனியார்
என்று தெரிந்துகொள்ளுங்கள்.

இங்கு, அநேக நவீன கலர்களிற் புதுமாதிரியான பட்டுப்புடைவைகள், ரவிக்கைக் குட்டைகள், தாவணிகள், பிள்ளை (பஸ்க்காலு) வேட்டிகள், தலைக்குட்டைகள், தாவடித் தினிசுகள், வெண்பட்டு தோத்தி, அங்க வஸ்திரம், சோமன் ஜோடி முதலிய பலவிதமான பட்டாடைகளுஞ் சகாயமான விலைக்குச் சித்தமாக விருக்கின்றன. விபரமான கேட்லாக் விரும்பினால் இனமாகப் பெற்றுக்கொள்ளலாம். உடனே எழுதுங்கள்.

K. S. Muthiah & Co.,
"Silk House",
BENARES, CITY.


## பனைமரங்கள்.

நூறு பனை மரங்களிலிருந்து ௫00 ரூபா பெறுமதியான வரும்படி பெறலாம்.

இது நூறு மரங்களிலிருந்து வரக்கூடிய வரும்படியின் சராசரி மதிப்பு. இது தென்னைகளிலிருந்துவரக்கூடிய வரும்படியிலும் அதிகம். தக்க முயற்சி செய்தால் யாழ்ப்பாணத்திலே இலங்கையின் மற்றெந்தப் பகுதிகளிலும்பார்க்கப் பனைமரங்களிலிருந்து அதிக லாபம் பெறலாம்.

இடைவிடாது கள்ளுக் கட்டினால் மரத்துக்குமரம் வித்தியாசமின்றி எந்தமரத்திலும் ஒரேமாதிரியாகக் கள்ளுச் சேர்க்கலாம். முதல் வருஷத்தில் இப்படி இல்லாதிருக்கக்கூடும். ஆனால் இரண்டாம் வருஷத்தில் எந்த மரத்திலும் கள்ளு நல்லாய்ச் சேர்க்கலாம். இரண்டாம் வருஷப் பலனையடைவதற்கு முதலாம்வருஷத்தில் நல்லவேலை செய்ய வேண்டும்.

இரண்டாம்வருஷத்தில் நூறு நாட்களுக்காகுதல் ஒவ்வொரு மரத்திலுமிருந்து ஒவ்வொரு கலன் கள்ளுச் சேர்க்கலாம். ஆகவே நூறு மரங்களிலிருந்து ௧0,000 கலன் கள்ளுச் சேர்க்கலாம்.

ஒவ்வொரு கலன் கள்ளிலிருந்தும் ஒன்றேடு ஐந்திலொரு றாத்தல் பனங்கட்டி செய்யலாம். ஆனால் ஒருறாத்தல் வீதப்படி கணக்கிட்டாலும் ௧0,000 றாத்தல் அல்லது ௨00கண்டி பனங்கட்டி செய்யலாம்.

குறைந்தபட்சமாக கண்டி ஒன்று ரூபா உருவீபதாகப்பார்த்தாலும் நூறு மரங்களிலிருந்து ௫00 ரூபா வரும்படி பெறலாம்.

இதைப்பற்றி முழுவிபரங்களு மடங்கியுள்ள பிரபந்தங்களை எங்களுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—
இலங்கைச் சீனிக் கம்பனியார்,
வல்லுவெட்டித்துறை.


கட்பார்வை.

குளிர்ச்சியான சந்திரகாந்த கில்லைபோட்ட
கண்ணாடிகளைப்பாவித்துப்
பார்வையைக்காப்பாற்றுங்கள்.
திறமான மூக்குக் கண்ணாடிகள்
எங்களிடம்
சகாயவிலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
எம் கல்லோ அன் சன்ஸ்,
பறங்கித்தெரு,
யாழ்ப்பாணம்.

S. U. N. & Co.
Weaving Silk Manufacturers,
BENARES CITY, U. P.

பெரிய கம்பெனி. நாணயமான சரக்குகள்
இந்தக் கம்பெனியில் செய்யப்படுகிற உத்தமமான பனாரீஸ் பட்டுச் சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், பஸ்காலு, காஷ்மீர் போர்வைகள், ருத்திராட்சங்கள், குழந்தைகளின் விளையாட்டுச்சாமான்கள் முதலான அபூர்வமான சாமான்களைப் பற்றிய




68 பக்கமுள்ள ஒரு "காட்லாக்"கும் ஒரு காசி பைரவா கயறும் கோருகிறவர்களுக்கு இனமாய் அனுப்பப்படும்.

எஸ்.யூ.என். அண்டு கம்பெனி,
பனாரீஸ் ஸிட்டி.

பம்பாய்ச் சேலைகள்.

மிகவும்நாணயமானது! மிகவும்சாரசமானது!!
16 முழ நீளம்.



இந்தச் சேலைகள் சேர்த்தியான வெள்ளை மல்லில் மத்தியில் மாங்காய், அன்னம், கிளி, சூரியப் பிறை, சந்திரப் பிறை, நக்ஷத்திரம், புட்டாக்கள்; இவைகள்போல்ஒவ்வொரு சேலைகளிலும் ஒவ்வொருவிதமுண்டு. கரைகளிலும் முந்தானைகளிலும் விசித்திரமான புஷ்பக் கொடிகள் போட்டிருக்கும். இந்தச் சேலைகள் பம்பாயிலிருந்து ஸ்பெஷலாகக் கொஞ்சந்தான் தருவித்திருக்கிறோம். வேண்டியவர்கள் கூடிய சீக்கிரத்தில் தருவித்துக்கொள்ளவும். செட்டால், சிங்கப்பூர், மோரீஸ் முதலிய தேசங்களுக்கு முற்பணமில்லாமல் வி. பி. யில் அனுப்ப முடியாது. சேலை 1-க்கு கிரயம் ரூபா 2, அணா 4.

கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்ட்,
மதராஸ்.

ஆறுமுகநாவலரவர்களால்
அச்சிற்பதிப்பிக்கப்பட்ட
தமிழ்ப்புத்தகங்கள்
வண்ணார்பண்ணை
சைவப்பிரகாச வித்தியாசாலையில்
விற்கப்படும்.
V. P. போஸ்டில் அனுப்பவேண்டுமெனா
தபாற்செலவுமாத்திரம் முந்தி அனுப்பவேண்டும்.

விளம்பரம்.



மிகவும் கீர்த்திபெற்ற
கேசரஞ்சிததைலம்.

இது ரோமத்திலுள்ள சகல ரோகங்களையும் போக்க வல்லது. தலைவலியை நீக்க வல்லது. இந்த அரிய எண்ணெயை உபயோகித்தால் கேசம் குருவாரம் ஒரு அங்குலம் நீளமாக வளர்ந்து அடர்த்தியாகும். இது குளிர்ச்சியையும் மூளைக்கு ஆறுதலையும் தருமியல்புடையது. ஒரு போத்தல் எண்ணெயின் விலை ரூபா க. தபாற்கூலி அணா ௫.

பிரமேகபிந்து.

இது மேகநோய் காரணமாகவுண்டாகும் சகலவியாதிகளையும் அதிசீக்கிரத்தில் நீக்கவல்லது. இது உண்மேரின் கொடிய நோயை நீக்கி அவர்களுக்குத் திடத்தையும் ஆறுதலையும் ஆரோக்கியத்தையுந் தருகிறது. ஒருபோத்தல் மருந்துக்கும் ஒரு பெட்டி குளிகைக்கும் ஒருங்கு விலை ரூபா க. அணா அ. தபாற்செலவு அணா எ.

"ஹைட்றசீல்"லுக்கு விசேஷமருந்து

இம்மருந்து இந்த நோயால் உண்டாகும் உபத்திரவத்தை இலகுவில் மாற்றிவிடும். இது வீக்கத்தை வற்றச் செய்து அவ்வீக்கத்துடன் உண்டாகும் கரத்தையும் வெளிவிடாது தடுக்கத் தக்கது. இந்நோய் உண்டாகி ஒருவருட காலம் மாத்திரஞ் சென்றிருந்தால் இரண்டு பெட்டி மருந்துடன் நோய் சொஸ்தமாய் விடும். நோய் ஒருவருட காலத்திற்கு மேற்பட்டதாயிருந்தால் கொஞ்சம் கூடிய காலத்திற்கு மருந்து சாப்பிட வேண்டும். இருபெட்டி மருந்தும் ஒரு போத்தல் எண்ணெயும் விலை ரூபா உ. தபாற் செலவு அணா ௬.

வியாதிகளினதும் மருந்துகளினதும் விபரங்களடங்கிய "கற்லக்கு"கள் வேண்டியவர்களுக்கு இனமாயனுப்பப்படும்.

வியாதிகளைப்பற்றிச் சுருக்கமாயெழுதியறிவித்தால் மருந்தோடு அல்லது மருந்தில்லாமல் இந்தியா, பேர்மா, இலங்கை, ஸ்ரேட்ஸ் பிரசிடென்சி முதலியஇடங்களுக்கு "பிறிஸ்கிறிப்ஷன்" (Prescreption) அனுப்பப்படும்.

KAVIRAJ N. N. SEN,
GOVT. MEDICAL DIPLOMA HOLDER,
18-1 & 19, Lower Chitpur Road,
CALCUTTA.

## இந்துஸ்தான் ஐக்கிய வீமாக் கம்பனி.

இதன் பிரதான ஆபீஸ்: இந்துஸ்தான் கட்டடம், கல்கத்தா.

இதன் மூலதனம் பத்துக்கோடி ரூபா.

இந்தியாவிலே பங்காளிகளுக்கு அதிகலாபத்தைக் கொடுக்கக்கூடிய கம்பனி இதுவன்றி வேறில்லை. சனங்களின் சொந்தமாயுள்ள வீமாக்கம்பனி இதுவொன்றே.

இதில் வீமாத்தீர்பவர்களுக்கு ஒருபோதும் நட்டம் வரமாட்டாது. அவர்கள் இக்கம்பனிக்கு வரும் லாபத்திலும் பங்குடையவர்களாவார்.

ஆண் பெண் என்னும் வித்தியாசமும், பயண வித்தியாசமும், தொழில்வித்தியாசமும், மரண வித்தியாசமும் இக்கம்பனியாராற் கவனிக்கப்படமாட்டாது.

பணங் கட்ட முடியாது தங்கள் "பொலிசிகளை" விட்டுவிடுவோர்க்கு மற்றக் கம்பனிகள் கொடுக்கும் தொகையிலும் பெருந்தொகை உடனே கொடுக்கப்படும், அல்லது அவர்களின் மரணத்தின்பின் அவர்களாற் குறிக்கப்படுவோர்க்குக் கொடுக்கப்படும்.

பணங்கட்டாதுவிட்ட "பொலிசி"களைக் காலவரையின்றி நினைத்தநேரத்திற் புதுப்பித்துக் கொள்ள இடங்கொடுக்கப்படும்.

சட்டப்படும் பணம் ஆருக்குக் கொடுக்கப்படவேண்டுமோ அவருடைய சொந்த வீட்டில் அது கொடுக்கப்படும்.

உத்தியோகஸ்தருள்ளும் சங்கத்திலும் தலைத்தரமான பிரபுக்களிருக்கிறார்கள்.

இக்கம்பனிக்குக் கட்டவேண்டிய தொகை சிறிது, லாபமோ அதிகம்.

இக்கம்பனியிலும்பார்க்க ஒருவனின் சுயவிருத்திக்கு ஏற்றதாகத் தோற்றுமெதுவும் அனுப்புதலுக்கும் நட்டத்துக்கும் ஏதுவானதாகவேயிருக்கும்.

இக்கம்பனிக்கு அக்கிராசனாதிபதி: கௌரவ மகாராஜா மகிந்திரசந்திரநந்திபகதூர்.

செக்கிறித்தெறி: சுரேந்திரநாத்தகூர் B A, ஜமீந்தார்.

மற்றைய விபரங்கள் பின்சொல்லப்படுகிறவர்களுக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

(பருத்தித்துறைப்பகுதிக்கு முகாமைக்காரன்)
ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை.
யாழ்ப்பாணம் இந்துகல்லூரித் தமிழ்ப்பண்டிதர்,
வண்ணார்பண்ணை.

M. A. தம்பு அண்ட் பிறதர்ஸ்
பிரதான முகாமைக்காரன்,
1 கெயிசர் தெரு, 13 B, 1-ம் குறுக்குத்தெரு,
கொழும்பு.

யாழ்ப்பாணத்துக்கு உப முகாமைக்காரர்: யாழ்ப்பாணம் வர்த்தகசங்கம்.

P. S. வீமாத்தீர்த்தவர்கள் தாங்கள்கட்டவேண்டியபணத்தை நேரே எங்களுக்கு அனுப்பவேண்டும்.


## பாணிலச்சட்டத்தின்கீழ் அறிவித்தல்.

இதன்பின் சொல்லப்படும் காணிகளுள் ஒன்றிலேனும் பலவிலேனும் எவ்வித உடந்தையாயினும் தங்களுக்குண்டெனவுருத்துப்பேசுவோர்கள் யாருமிருந்தால், அவர்கள், 1916-ம் ௵ (ஜூன்) ஆனி௴ 2-ந் தேதி துவக்கம் மூன்று மாசத்திற்குள், 1897-ம், 1899-ம், 1900-ம், 1903-ம் ஆண்டுகளின் பாணிலச்சட்டங்களின் 28-ம் பிரிவின் பிரகாரம் ஏற்படுத்திய விசேஷ உத்தியோகஸ்தர் ஜே. எம். டேவிஸ்துரை அவர்களிடம் கொழும்பு கோட்டையிலிருக்கும் அவருடைய கந்தோரில் முகாமுகமாயேனும் எழுத்து மூலமாயேனும் தங்களுக்குண்டென்னும் உரித்தை அல்லது உடந்தையைத் தெருவியாவிடில், சொல்லிய விசேஷஉத்தியோகஸ்தர் சொல்லிய சட்டங்களால் தமக்கு உண்டாய அதிகாரத்தைக் கொண்டு சொல்லியகாணிகளை அல்லது அவைகளுள் உரித்துப் பேசப்படாதனவற்றை முடிக்குரிய ஆதனமெனத் தமது கைச்சாத்திட்டு எழுத்துமூலமாய் வெளிப்படுத்துவார் என்பதை அறிந்துகொள்க.

ஜே. எம். டேவிஸ்,
விசேஷ உத்தியோகஸ்தர்.

கட்டிய காணிகளின் விபரம்.

வடமாகாணம் மன்னார்டிஸ்திறிக்கைச் சேர்ந்த மன்னார்த்தீவின் கிழக்குப்பகுதியில் தோட்டக்காடு என்னுங் கிராமத்திலுள்ள கீழ்க் குறிக்குங் காணித்துண்டுகள்:—

பிரதமபடம் 3,710.

| காணித்துண்டு. காணியின்பெயர். | விசாலம். ஏ. ரூ. ப. |
|---|---|
| 1 சஞ்ஜுவான்கோவிற்புட்டித்தரவை, | 65 3 11 |
| 1K சஞ்ஜுவான்கோவிற்காடு அல்லது சேற்றோடைத் தரவை | 2 3 15 |
| 1L சஞ்ஜுவானகோவிற்காடு | 1 1 7 |
| 1N டிை | 2 1 30 |
| 1O டிை | 15 1 14 |
| 1Q டிை | 1 1 24 |
| 1R டிை | 2 0 22 |
| 1S டிை | 2 1 6 |
| 1T டிை | 1 3 33 |
| 1U டிை | 24 0 25 |
| 1V டிை | 1 1 35 |
| 1W டிை | 2 1 4 |
| 1X டிை | 5 1 36 |
| 1Y டிை | 1 0 18 |
| 1Z சஞ்ஜுவான்கோவிற் புட்டித் தரவை | 7 2 27 |
| 1AA சஞ்ஜுவான்கோவிற்காடு அல்லது வெல்லபுட்டித்தரவை | 1 0 24 |
| 1J1 சஞ்ஜுவான்கோவிற்காடு | 5 1 12 |
| 1J2 சஞ்ஜுவான்கோவிற் புட்டித் தரவை | 11 1 28 |
| | 155 2 11 |

எல்லைகளாவன, வடக்கு-முடிக்குரிய உசிலடித்தீவு, முடிக்குரியஉப்புத்தரவை, சுவாம்பிள்ளை சவரியும் மறுபேரு முரித்தாகும் சஞ்ஜுவான் கோவிற் காடு, தெளமுகத்துவாரத்திலிருந்து மன்னாருக்குப்போகும் றோட்டு, சுவாம்பிள்ளை சவரியும மறுபேரு முரித்தாகும் சஞ்ஜுவான் கோவிற் காடு, தெளமுகத்துவாரத்திலிருந்து மன்னாருக்குப்போகும் றோட்டு; கிழக்கு-சுவாம்பிள்ளை சவரியும் மறுபேரு முரித்தாகும் சஞ்ஜுவான் கோவிற்காடு, முடிக்குரிய சஞ்ஜுவான் கோவிலடிக்காடு (றெயில் பாதைக்குச் சேமிக்கப்பட்ட நிலம்), முடிக்குரிய செக்கடித்தரவை (றெயில் பாதைக்குச் சேமிக்கப்பட்ட நிலம்), முடியால் உரித்தாடப்படும் செக்கடித்தரவை, முடிக்குரிய செக்கடித்தரவை, (றெயில் பாதைக்குச் சேமிக்கப்பட்ட நிலம்), தெற்கு-முடிக்குரிய சேற்றோடை (கடல்); மேற்கு முடிக்குரிய சேற்றோடை (கடல்), வெள்ளம் நிற்குமிடம், முடிக்குரிய சேற்றோடை (கடல்), வெள்ளம் நிற்குமிடம், முடிக்குரிய சேற்றோடை (கடல்).

Notice No. 5872 Mannar S. O. 1 - 1916.

## பத்திரக்கிரய வரவு.

| ஸ்ரீ. | ரூ. ச. |
|---|---|
| ,, ச. பஞ்சாட்சரக்குருக்கள், ஆனைக்கோட்டை | 5-00 |
| ,, வே. கணபதிப்பிள்ளை, சரசாலை | 6-50 |
| ,, சி. பொன்னையா, ,, | 5-68 |
| ,, K- வாரித்தம்பி, அல்வாய்தெக்கு | 8-39 |
| ,, சி- வைத்தியலிங்கம், பளை | 5-00 |
| ,, K- நடராஜா, மாத்தளை | 8-59 |
| ,, ச- செல்லையா, தளவெட்டி | 5-00 |
| ,, வை-ஆ- அம்பலவாணபிள்ளை, அத்தியடி | 4-50 |
| ,, அ- சுப்பாபிள்ளை, கொட்டடி | 2-25 |
| ,, S- கந்தையாசெட்டி, வணனை | 6-50 |
| முத்துக்குமாரசாமிவித்தியாசாலை, கைதடி | 1-00 |


# இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்:-நள ௵ ஆனி௴ ௨௰௨.


## மிருக வணக்கம்.

உலகத்தின் பூர்வ சமயநிலையைக் குறித்து விசாரிக்கப் புகுந்த லௌகிக சாத்திர பண்டிதர் சிலர் சில தேசங்களிலே மிருகவணக்கம் அனுசரிக்கப்பட்டு வந்ததென்பர். இந்தக் கொள்கையைச் சிலகிறிஸ்தவர்கள் தூக்கி எடுத்துக்கொண்டு, ஆதியிலே அநாகரிகமாக்களிடத்திருந்த மிருக வணக்கமே பிற்காலத்து விநாயகவணக்கமாகப் பரிணமித்ததென்பர்.

பூர்வ காலத்திலே சில தேசங்களிலே மிருக வணக்கம் அனுசரிக்கப்பட்டு வந்ததென்பதை நாமும் ஒத்துக்கொள்வோம். ஆயினும், இந்த வணக்கம் எப்படி உற்பவித்ததென்பதை நாம் ஆராய்ந்து பார்த்தல்வேண்டும். உலகத்தின் சமயநிலையை ஆராயுமிடத்து, லௌகிகநெறியை மாத்திரம் துணைக்கொண்டு ஆராய்வது கூடாது; உலகத்திலே கடவுளுடைய திருவருள் சேட்டிக்கும் முறையாகிய அருண்முறையையுந் துணைக்கொண்டே யாம் அதனை ஆராய்தல்வேண்டும். அருண்முறையைத் தூரம்போக்கிவிட்டு, லௌகிக முறையைமாத்திரமே கருவியாகக்கொண்டு சமய ஆராய்ச்சி செய்வோமெனின், சமயத்தின் உற்பத்தி விருத்திகளைக் குறித்து நாம் சரியான அறிவைப் பெறுவது கூடாது. லௌகிகமுறைகளிற்றாலும் அருண்முறை விரவுற்றுக்கிடக்குமாயினும், அவற்றின்கண்ணே அது பெரிதும் மறைந்துகிடக்கும். சமயநெறிகளின்கண்ணே அவ்வருண்முறை லௌகிகங்களினும அதிகமாக வெளிப்பட்டு விளங்கும். சமயநெறிகளில் அருண்முறை வெளிப்படுவதுதானும் பலதிறப்படும். உண்மைச்சமய நெறிகளில் பூரணமாகவும், இயற்கைச் சமயநெறிகளில் மழுக்கமுற்றும், கற்பனாசமய நெறிகளில் மலினமுற்றும் அவ்வருண்முறை விரவுற்று விளங்கும். ஆனால் கற்பனாசமயங்கடாமும் அருண்முறையை அடியிடாகக்கொண்டே விளங்கும். கற்பனாசமயங்கள் தம்மினும் இவ்வருண்முறை லௌகிக வியவகாரங்களினும்பார்க்க அதிகமாக விரவுற்று விளங்கும் என்பது சமயவியவகாரங்களில் நனிபயின்றார்க்கு இனிது புலப்படும். சமயவியவகாரங்கட்கெல்லாம் முக்கிய சாதனமாகிய அருண்முறையைப்பற்றிய அறிவின்றி, லௌகிக முறையைக் குறித்த அறிவு மாத்திரம் உடையார், சமயவிசாரங்களைக் குறித்து நிச்சயிக்கத்துணிவது பெரும் பேதைமையாகும். அருண்முறையையும் லௌகிக முறையையும் வேறுபடுத்தி நாம் எழுதும் இந்த வியாசந்தானும், லௌகிக அறிவு மாத்திரம் உடையார்க்குச் சுவைக்கமாட்டாது. அருண்முறை (Law of spirituality) விரவுற்று விளங்கும் சமயக்கிரமங்களை, லௌகிகமுறை (Law of materiality) கொண்டு ஆராயத்துணிவது சமய ஞானம் இல்லாமையால் எய்திய சழக்கே யாகும். லௌகிக அறிவுதானும் சமய அறிவுக்கு ஒரு வழிகாட்டியாகுமாயினும், அந்த லௌகிக அறிவு அருண்முறையைப்பற்றிய அறிவோடு கூடிச்சென்றாலன்றிச் சமய உண்மைகளை அறியமாட்டாது. அருண்முறையைப்பற்றிய அறிவில்லாமையினாற்றானே, லௌகிகசாத்திர பண்டிதர் பலர் சமயவிஷயங்களிற் பெரிதும் மோசம்போகின்றார்கள்.

மிருக வணக்கத்தின் உற்பத்தியைக் குறித்து நாம் ஊன்றிச் சிந்திப்போம் எனின், அது அருண்முறையை ஆதாரமாகக்கொண் டெழுந்ததோ, அல்லது லௌகிக முறைபற்றி அமைந்ததோ என்பது நன்கு புலப்படத் தக்கதாம். மிருகங்கள் மனிதனிலும் மிகத் தாழ்ந்த நிலை உடையன என்பது எல்லாமனிதருக்கும் உடம்பாடாயதொரு கொள்கை. தம்மினுந் தாழ்ந்ததாகிய மிருகத்தை, தம்மினும் உயர்ந்தபொருளாகக் கொண்டு யாராவது வணங்குவாரா? அச்சங் காரணமாக அங்ஙனம் வணங்கிவந்தார் எனின், மனிதர் தங்கள் அச்சத்தை மிருகங்கள் அறிபத்தக்கன என்றுவது, தாம் அஞ்சுவதுண்டானால் மிருகங்கள் தம்மைத் தீங்கு செய்யா என்றுவது; அல்லது, தாம் மிருகங்களை வணங்கும்போது அந்த வணக்கத்தின் உள்ளுறைப் பொருளை எந்த மிருகமாவது அறியத்தக்கதென்றுவது, அங்ஙனம் அறிந்து அவ்வணக்கத்திற் பிரீதியுற்று, வணங்குவோரைத் தீங்கு செய்யாதொழியும் என்றுவது ஒருபோதும் எண்ணமாட்டார்கள். இங்ஙனம் எண்ணமாட்டாத மனிதர் மிருகத்தை ஏனோ வணங்குவர்? அவர்கள் அந்த மிருகத்தை யாதானும் ஓர் உபாயத்தால் மேற்கொள்ள வழிதேடுவார்களன்றி, அதனை ஒருபோதும் வணங்கத் துணியார். பின்னை இந்த மிருக வணக்கம் எங்ஙனம் உற்பத்தியாயிற்றென்று நாம் ஆராய்வாம் எனின், இவ்வணக்கத்துக்கு ஆதாரம் மிகச் சிறந்ததோர் அருண்முறை என்பது தெற்றெனப் புலப்படும். கடவுள் எல்லாச் சீவர்களையும் உயிர்க்குயிராய் நின்று சேட்டிப்பவராதலின், துட்ட மிருகங்களையும் அவற்றது உயிர்க்குயிராய்நின்று அவரே சேட்டிக்கின்றார் என்னும் உண்மையை அறிந்த மெய்ஞ்ஞானிகள், துட்டமிருகங்களாற் தமக்கு இடையூறு நிகழாதபடி, அத் துட்ட மிருகங்கள் வாயிலாகத் தமக்கு ஊறுசெய்யும் கடவுளை, அம்மிருகங்களின் வைத்து வணங்கினார் என்பது நன்றாக அனுமிக்கப்படும். இந்த வணக்கத்தின் நோக்கம் காலாந்தரத்திலே மறைந்துவிட, அது புறத்தோற்றமாத்திரையாகவே சனங்களிடத்திலே நிலை பெற்றுவந்து, சனங்கள் அநாகரிகம் படைத்த காலத்திலே, அது மிருக வணக்கமாகவே முற்றிவிட்டதென்க. ஆகவே, இம்மிருகவணக்கத்தின் உற்பத்தி மிகச் சிறப்புடையதொன்றென்பதும், இச்சிறப்புக் காலகதியால் மறைந்துவிட அவ்வணக்கத்தை வெளித்தோற்ற மாத்திரையாகவே அறியாச் சனங்கள் பழக்கம்பற்றி அனுசரித்துவந்தார் என்பதும் நன்றாக யூகிக்கப்படும்.

சைவசமயிகளாகிய நாமெல்லாம் செய்யும் விநாயகவணக்கம், இங்ஙனமாக அதன் பொருட்கிடையை மறந்து நம்மனோரால் கைக்கொண்டு வரப்படுவதென்றுதானும் கொள்வது கூடாதிருக்கும்போது, அவ்வணக்கம் மிருகவணக்கத்திலிருந்து உற்பவித்ததென்று, (சாத்திரத்துண் மறைநதுநின்று) நமது சமயத்தைத் தூஷிக்கும் கிறிஸ்தவர்களது யோக்கியதையைக் குறித்து நாம் சொல்லத்தக்கதொன்றுமில்லை. உலகமே அவர்களைநிறுத்துக்கொள்ளட்டும். நாம்மேலே எடுத்து விளக்கிய அருண் முறையாக, யானைமுகங்கொண்டு நமது பெருங்கருணைக் கடலாகிய விநாயகப் பெருமான் யானைமுகாசுரன் ஒருவனைச் சங்கரித்தமையானும், நாம் முன்னொரு பத்திரிகையிலே விளக்கியபடி அவருடைய திருவடிவத்திலே ஆதிமந்திரமாகிய பிரணவசொரூபமும் இன்னும் பல தத்துவார்த்தங்களும் அமைந்திருத்தலை ஆகிரந்தங்களாகிய வேதங்கள் தாமே எடுத்து விளக்குதலானும், அவரை வணங்கும் வணக்கத்தை மிருக வணக்கம் என்று சொல்வார்க்கு அவரே பலனளிப்பாராக. வேதங்களிற் கூறப்படும் உண்மைப் பொருள்களை வலியுறுத்து எடுத்து விளக்க வந்தனவும், அவ்வேதங்களுக்குப் பல நெடுங்காலத்துக்குப் பின்னர்த் தோற்றியனவுமாய புராணக்கூற்றுகளின் உண்மைப் பொருளை அறியாமல், அவற்றுக்கு விபரீதார்த்தம் படைத்து இந்தக் கிறிஸ்தவர்கள் தாம் மயங்குவது மாத்திரமல்லாமல் நமது சமயத்துள்ளாரையும் மயக்கத் துணிகின்றார்கள். ஆனால் அந்த உண்மைப் பொருளை இருபதினாயிரம் வருடங்களுக்கு மேற்படக் கையாண்டுவரும் நம்மவரை இவர்கள் மயக்கத் துணிவது இவர்களது பிராந்தியேயாம். விநாயகக் கடவுளை வணங்கும் வணக்கம் மிருகவணக்கமல்ல என்பது மேலேஎடுத்துக் காட்டப்பட்ட பல நியாயங்களான் மாத்திரமன்றி அவருடைய திருவடிவத்திலே மிருக பூத மானிட வடிவங்களாகிய மூவகை வடிவங்கள் அமைந்து கிடப்பது கொண்டும் இனிது காட்டப்படும். இவ்வாறு மூவகை வடிவுகொண்ட மிருகம் எங்கேயாவது எப்போதாவது உண்டென்பது மிருகசாத்திரிபுணரது சாட்சியங்கொண்டு காட்டத்தக்கதல்ல. இந்தக் கிறிஸ்தவர் ஆதியில் வணங்கப்பட்டு வந்த மிருகவடிவத்திலே பிற்காலத்துப் பிறவடிவங்களும் சேர்க்கப்பட்டன என்கிறார். இதற்குச் சாட்சி என்ன? அல்லது அங்ஙனம பிறவடிவங்கள் சேர்க்கப்படவேண்டிய அவசியமென்ன? மிருக வடிவம் தக்கதன்றெனக் கொண்டமை பற்றியே பிற வடிவங்கள் சேர்க்கப்பட்டனவாம் எனின், அது தக்கதன்றெனக் கொள்ளப்பட்டால், அது ஒருங்கே ஒழிக்கப்பட்டுவிடுமன்றோ? அங்ஙனமின்றி தக்கதன்றென்று காணப்பட்ட அவ்வடிவத்தோடு, தக்கனவல்லவாய பின்னும் இரண்டுவடிவங்கள் சேர்க்கப்படுமாமோ? ஆகவே இக்கிறிஸ்தவரது விபரீத யூகமே இவரது கொள்கையின் துர்ப்பலத்துக்குத் தக்கதொரு சான்றாக அமைந்து கிடப்பது காண்க.

விநாயக வணக்கத்தை மிருக வணக்கமென்று சொல்பவராகிய இந்தக் கிறிஸ்தவர் தங்கள் பெண்கள் இன்றைக்கும் புறாத்தாலி செய்து கட்டுவதுபற்றி இவர்களைப் புறா வணக்கக்காரர் என்று சொல்ல என் மறந்தாரோ? செருபீன் வணக்கத்தை எடுத்தோதும் விவிலியநூலை மிருக வணக்கப் புத்தகம் என்று சொல்ல ஏன் மறந்தாரோ? கிறிஸ்துவை வணங்கும் தன்னை ஏன் நர வணக்கக்காரன் என்றுசொல்ல மறந்தாரோ? அவரே சொல்லட்டும்.

## சமாச்சாரம்.

சுப்பிறீங்கோடு:—இத்தி௴ ௩௦௳ ஆரம்பமாகும் யாழ்ப்பாணம் கிறிமினல் விசாரணைச் சுப்பிறீங்கோட்டிற்கு இதுவரை ஆறு வழக்குகள்பாரப்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்னு மிரண்டொரு வழக்குகள் பாரப்படுத்தப்படக்கூடும்.

வைசூரி:—கொட்டடியிலே அம்மை ஆஸ்பத்திரிக்கணித்தாய்ச சிலருக்கு வைசூரி நோயுண்டாகி இரண்டொருவர் இறந்துபோயினர் இவர்களுடன் கூட வசித்தவர்கள் ஏறக்குறைய இருபது பேர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகப்பட்டிருக்கின்றனர். அம்மையாஸ்பத்திரி குடிகள் மிக நெருங்கியிருக்குமிடத்துக்கணித்தாயிருப்பது நன்றன்று. இதனைத்தனிமையான ஓரிடத்துக்குவிரைவிலகற்றுவது அத்தியாவசியகமே.

கலகமறியற்காரரின் விடுதலை:—மகமதிய புத்த கலகத்திற் சம்பந்தப்பட்டுத் தனித்தனி ௬௪ வருட கடினவேலைழிய மறியல் விதிக்கப்பட்ட ஜோன் செனநாயக, சைமன் செனநாயக என்பவர்களும் நாலுவருட கடினவேலையிய மறியல் விதிக்கப்பட்ட ஹென்றி செனநாயக வென்பவரும் தேசாதிபதியவர்களால் மன்னிக்கப்பெற்று யாழ்ப்பாணம் மறியல் வீட்டிலிருந்து விடுதலையடைந்து தமது ஜெனனவூருக்குச் சென்றனர்.

இலங்கைக் கைத்தொழில்கள்:—இலங்கையிலே இப்பொழுது நடைபெறும் தொழில்களில் கிருஷித்தொழிலையொழிந்த மற்றைய தொழில்களை எப்படி விருத்தியடையச் செய்யலாமென்பதைப்பற்றியும் என்னென்ன தொழில்களை இங்கு புதிதாய் நடைபெறச் செய்யலாமென்பதைப்பற்றியும் ஆலோசனைசெய்து தீர்மானிக்கும்படி தேசாதிபதியவர்கள் பதினொரு பேரை விசாரணைக்காரராக நியமித்திருக்கின்றனர்.

அபினும் சுதேசவைத்தியரும்:—சுதேசவைத்தியர்களுக்கு அபின் விற்றலைப்பற்றிப் புதிய ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. சுதேசவைத்தியர்கள் தங்கள் நாமங்களைப்பதிவுசெய்யும்படி சமீபத்திலிருக்கும் கச்சேரியில் கேட்டுக்கொள்ளவேண்டியது. புறோவின்சல் அல்லது டிஸ்திறிக் 'போட்டார்' எவர்களைப் பதிவுசெய்யலாமென்று சொல்லுகிறார்களோ அவர்களே பதிவுசெய்யப்பட்டு அபின்விலைக்குவாங்குவதற்கு இடங்கொடுக்கப்படுவார்கள்.

விடேரிந்தமை:-பெரியகடைக்குத் தெற்குப்பக்கத்திலே கிடுகால் வேயப்பட்டிருந்த சோற்றுக்கடையொன்றில் தீப்பற்றி அக்கடையுமதற்கு அணித்தாயிருந்த வேறுமூன்று சோற்றுக்கடைகளும் முழுதுமெரிந்துபோயின. அன்றுதானே வண்ணார்பண்ணையிலே வைத்தியலிங்கமென்னுமோர் சுமானுடைய வீட்டில் தீப்பற்றி அது முழுதுமெரிந்துபோனது. இத்தியாலுண்டாயசேதம் ஏறக்குறைய ஆயிரம் ரூபாவரையிலுண்டாம்,

காற்று மும்முரமாய் வீசுயிக்காலத்தில் வீட்டுக்காரர் விசேஷமாய் ஓலைவீட்டுக்காரர் நெருப்பைப்பற்றி அதிக சாக்கிரதையுள்ளவர்களாயிருத்தல்வேண்டும்.

கல்லாலெறிந்து கொன்றது:—சவிபுரத்தில் ஒருவன் ஒருவனைக் கல்லாலெறிந்து கொன்றுவிட்டனன். கொட்டடியிலும் ஒருவன் கல்லாலெறியப்பட்டு மரணமாஞன்.

கதாப்பிரசங்கம்:—சென்ற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ௩ மணி தொடக்கம் ௯ வரைப்பாய் இந்துக்கொலீஜ் மண்டபத்தில் சிவநாமசங்கீர்த்தனங்களாகிய பஜனையும் ௬ மணிதொடக்கம் ௭ மணிவரையும் ஸ்ரீ. மாணிக்கத்தியாகராசா அவர்களால் மிருதங்கமுதலிய பக்கவாத்தியங்களோடு பழியஞ்சிய திருவிளையாடற் சரித்திர கதாப்பிரசங்கமும் செய்யப்பட்டது. அங்கு வந்து கேட்டோரனைவரும் சிரவண மனனம் செய்து மிக்க களிப்போடு சென்றனர்.—கடிதம்.

துவக்குச் சட்டம்:—ஒற்றைக்குழற்றுவக்குக்கு வருஷம் பத்துரூபாவும் இரட்டைக்குழற்றுவக்குக்கு வருஷம் பதினைந்துரூபாவும், றிவோல்வர் துவக்குக்கு வருஷம் ௫0 ரூபாவும் கொடுத்து லைசென்ஸ் பெறவேண்டுமென்றும், தக்கவர்களெனக் காண்ப்படுவோர்க்கே லைசென்ஸ் கொடுபடவேண்டுமென்றும் விதிக்கும் ஓர் சட்டம் இலங்கைச் சட்டநிருபணசபைமுன் கொண்டுவரப்பெற்று இரண்டாம்முறை வாசிக்கப்பட்டபோது மகமதிய பிரதிநிதியையொழிந்த மற்றைவர்ப்பிரதிநிதிகள் யாவருமதற்கு விரோதமாகப் பேசினர். ஆயினும் அரசாட்சியார்பக்கப் பிரதிநிதிகள் யாவருமேகோபித்துநின்றமையால் அது அரங்கேறலாயிற்று. இச்சட்டமிரண்டாம்முறை வாசிக்கப்பட்டபோது அற்றேணி ஜெனறலவர்கள் இச்சட்டம் நிர்வாகசபைமுன் ஆலோசிக்கப்படும்போது லைசென்ஸ் செலவைக் கூடியவரை குறைத்துவிடத் தாம் முயல்வாரெனச் சொல்லியிருக்கின்றனர்.

அமெரிக்காவுக்கும் பிரான்சுக்கு மிடையில் கம்பியில்லாத் தந்தி:—அமெரிக்காவிலுள்ள உவாஷிங்டன் பட்டினத்திற்கும் பிரான்சிலுள்ள பரிஸ் பட்டினத்திற்குமிடையில் இப்போது கம்பியில்லாது தந்திச்சமாச்சார மனுப்பப்படுகின்றதாம்.

அமெரிக்காவுக்கு ஆகாயக்கப்பலில் பிரயாணம்பண்ணல்:—நோர்வே தேசத்திலுள்ள ஓர் வாலிபன் அத்திலாந்திக்சமுத்திரத்தைக் கடந்து அமெரிக்காவுக்கு ஓர் ஆகாயரதத்தில் செல்ல ஆயத்தஞ்செய்கின்றனனும்.

லார்ட் கிச்சினரின் மரணசாதனம்:—லார்ட் கிச்சினரின் அசைவற்ற அசைவுள்ள ஆதனம் ௧,௭௪,௪௨0 பவுண் பெறுமதியுள்ளது. இதில் தமக்குக்கீழிருந்த ஆறு உத்தியோகத்தருக்குத்தலைக்கு ௨00 பவுண் கொடுக்கவேண்டுமென்றும், கீழ் ஆபிரிக்காவிலுள்ள தனது ஆதனம் முழுதும் ஜெனறல்பிற்ஸ்ஜெறல்ட் என்பவருக் குரியதாகவேண்டுமென்றும் எஞ்சிய பெரும்பாகம் தமது மருகர் கிச்சினருக்குச் சேரவேண்டுமென்றும் மரணசாதனத்திற் சொல்லப்பட்டிருக்கின்றது.

சகமரணம்:—கல்கத்தாவுக் கணித்தான 'ஹௌரு' என்னுமூரில் அம்த என்னுங் கிராமத்தில் நிபார்மூர்க்கேர்ஜி என்னும் இந்து வாலிபன் ஒடுன்சிவின் புதல்வியாகிய ரதிராணி தேவி என்னுங் கன்னிகையைச் சில வருடங்களுக்கு முன்னர் மணஞ்செய்துவாழ்ந்துவந்தான். இவன் விவாகஞ்செய்வதற்கு முன்னர் சிலகாலங்களாகச் சந்நியாசிகளுடன் வசித்துவந்தவன். பின்னர் பெற்ருர் விருப்பத்தின்படி குறித்த பெண்ணை விவாகஞ்செய்து மாதுலன் மாசந்தோறுமனுப்பிவந்த ௪0 ரூபாவைப்பெற்றுக் கல்கத்தாவில் பீ. ஏ. வகுப்பில் படித்துச் சிலமாசங்களுக்கு முன்னர் நிகழ்ந்த மேற்படி பரீட்சைக்கு இவனுஞ் சென்றிருந்தான்; ஆனுற் சித்திபெறவில்லை. ஒருநாள் இவன் கடைக்குச்சென்று ௩ தோலா அபினை வாங்கிக்கொண்டுவந்து படுக்கைக்குப்போகும்போது உண்டு அதுகாரணமாக உயிர்நீங்கினன். இவனுக்கு இறக்கும்போது வயது ௨௪. ௧௬ வயதுள்ள இவனது மனைவியும் எஞ்சிய அபினை எடுத்துண்டு குற்றுயிராய்க் கிடக்கக் காணப்பட்டாள். அவள் மாமன் ஓடிவந்து 'என் இப்படிச் செய்தீர்கள்''? என மருகியை வினவியபோது அதற்குக் காரணஞ்சொல்லக் கூடிய நிலையில் தானிருக்கவில்லையென்றும் தன்னையும் தன் பத்தாவுடன் ஒரே ஈமத்திலேற்றித் தகனஞ் செய்துவிடல் வேண்டுமென்றுஞ் சொல்லி உயிர்துறந்தாள். அப்பெண்ணின் விருப்பத்தின்படியே மாமன் முதலானேர் அவளைத் தகனஞ்செய்தனர்.

## கொழும்பு மதுவிலக்குச் சங்கம்.

கொழும்பில் நடைபெற்ற ஐக்கிய மதுவிலக்குச்சங்கக் கூட்டமொன்றில் சேர். பொன்னம்பலம் அருணுசலம் அவர்கள் மதுபானத்தாலுண்டாகும் தீமைகளைப்பற்றிப் பேசியபோது கனடாவிலே 'ஒன்றாரியோ' என்னுமிடத்தில் ஊரவர்கள் மதுபானத்தால் தமது தேசத்திலுண்டாகும் தீமைகளையெல்லாம் நன்குணர்ந்து அதனை முழுதும் விட்டுவிடத் தீர்மானித்தார்களென்றும் இலங்கையிலே மதுபானவரியால் வருஷம் 85 லட்சம் ரூபாவரையில் வருகின்றதென்றும், இத்துடன் சாராயக் கள்ளுக் குத்தகைகாரருடையும் லாபத்தைச் சேர்த்தால் ஏறக்குறையப் பத்து லட்சம் ரூபா வரையில் ஊரவர்கள் மதுபானத்தின்பொருட்டுச் செலவழிக்கின்ருர்களென்றும், இலங்கைக் குடிசனத்தொகையோடு இச்செலவை ஒப்பிட்டுப்பார்த்தால் சராசரி ஒவ்வொரு மனிதனும் மாசம் இரண்டரை ரூபா வரையில் மதுபானத்தின்பொருட்டுச் செலவழிக்கின்றுனென்றும், மாசம் எழெட்டு ரூபா உழைக்கும் ஏழைச்சனங்கள் மாசம் இரண்டரை ரூபா செலவழிக்கிறதாயிருந்தால் அவர்களெப்படி உயிர்வாழக் கூடுமென்றும், மதுபானம் சுகத்தைக் கெடுப்பதன்றிச் சுகத்தைக் கொடுக்கமாட்டாதென்றும், மதுபானஞ்செய்யாத ஓர் குடும்பத்திலுள்ள பிள்ளைகளையும் மதுபானஞ்செய்யும் ஓர் குடும்பத்திலுள்ள பிள்ளைகளையும் சோதித்துப் பார்த்தபோது முந்திய குடும்பத்திலுள்ள பிள்ளைகள் சுகதேகிகளாய் நெடுங்காலம் சீவிக்க, பிந்திய குடும்பத்திலுள்ள பிள்ளைகளுட் பலர் அங்கவீனர்களும் வியாதிகாரருமாகக் காணப்பட்டார்களென்றும் சொல்லினர். சேர். பொன்னம்பலம் அருணுசலமவர்கள் இன்னுமிவைபோன்ற பல நியாயங்களை யெடுத்துக்காட்டி மதுபான விலக்குச்சபையார்க்கு இக்காலத்தில் பலகஷ்டங்கள் நிகழினும் அவர்கள் மனத்தளர்வெய்தாது பெருங்கேடுகளுக்கெல்லா மேதுவாகிய மதுபானத்தை நமது தேசத்தினின்றும் நீக்கிவிட ஊக்கப்படுதல்வேண்டுமென்றுங்கூறினர்.

## சிதம்பரம் ஞானப்பிரகாச திருக்குளம்.

இத்திருக்குளப் படித்துறைத் திருப்பணித் தருமத்துக்குப் பொருள் உபகரித்தோர் பெயருந் தொகையும்:—

(49-ம் இலக்கப் பத்திரிகைத் தொடர்.)

நேரில் வரவு.

| | |
|---|---|
| ஸ்ரீ. | ரூ. ச. |
| A. வேலுப்பிள்ளை, (Labu) மூலமாக | |
| A. சண்முகம், ,, | 10-50 |
| S. நாகலிங்கம், ,, | 5-50 |
| N. வைத்திலிங்கம், ,, | 8 75 |
| N. மயில்வாகனம், ,, | 5-25 |
| சித. மு. ப. சிதம்பரநாதச்செட்டியார், (ஐந்தாம்முறை.) | 5-50 |
| ஷெயார் மூலமாக | |
| சி. சோமசுந்தரஐயர், இந்துகல்லூரி. | 1-00 |
| சி. காசிப்பிள்ளை, ,, | 2-50 |
| பே. முருகேசு, தாவடி. | 1-00 |
| | 40-00 |
| முன் வெளிப்படுத்தியதொகை: | 2255-99½ |
| ஆகத் தொகை: | 2295-99½ |

இங்ஙனம்,

களஞ ஆனிமீ. } ச. பொன்னம்பலவன்.
சைவப்பிரகாச வித்தியாசாலை,
சிதம்பரம்.

## தந்திச் சமாச்சாரம்.

### (யுத்தசங்கதிகள்)

ஜூன்மூ 26உ.

திறிபிசோன் என்னுமிடத்தைச்சேர்ந்த பிளாஞ்ஜிஞடிஜிவிலிஸ் கிராமத்தில் துருக்கியர் இரவில் செய்த சண்டையில் தோல்வியுற்றுப் பின்காட்டினர்.

மெசபொற்றேமியாவில் துருக்கியர் நிவரோ என்னுமிடத்தில் ரூசியரையெதிர்த்துச் சில இடங்களைப் பிடித்தபோது ரூசியர் வாள் யுத்தம் செய்து அவர்களைப் பின்னிடச் செய்தனர். பகடாட்பக்கத்தில் துருக்கியர் எதிர்த்து யுத்தஞ்செய்தபோது அதிக சேதமுற்றுப் பின்காட்டினர்.

துருக்கியரும் ஆமேனியரும் செய்துகொண்ட வியாபார ஒழுங்குகள் விடப்பட்டன.

மக்கம் 'செரிவ்' அவர்கள் தமது மூத்தகுமாரர் மூவர்க்கு மூன்று சேனைகளைக் கொடுத்து ஒவ்வொரு சேனைக்கும் ஒவ்வொருவரைச் சேனுபதியாக்கித் துருக்கியர் துணைச்சேனைகளையனுப்பாதபடி தடைசெய்வதற்கு ஹெட்ஜாஸ் என்னுமிடத்தில் நூறுமைல் தூரத்துக்கு றெயிற்பாதையை அழித்தனர்.

செரிவின் குமாரர்களில் ஒருவர் மெடினுவை முற்றிக்கையிட, இரண்டாமவன் தெயிவ்வென்னுமிடத்தைப் பிடிக்க, மற்றவர் ஜெடாவென்னுமிடத்தைப் பிடித்தனர். என்வர்பாஷா ஹெட்ஜாஸ்என்னுமிடத்தைத்தரிசித்தபோது, 'செரிவ்' பாஷாவைநோக்கி 'நீர் துருக்கியை நாசத்துக்குள்ளாக்கிய ஓர் அறியாமையுள்ளவாலிபன்' என்ருர்.

ஜூன்மூ 27உ.

பாளிமேந்துச்சபையிலே தெனன்ற் என்பவர் இப்போது மெசபொற்றேமியாவைக் குறித்து வேறு விபரங்கள் கூறுதலனுவசியகமென்றனர்.

பாளிமேந்துச்சபையிலேவாரட்றபோட்சிசிலவர்கள், ஜர்மனியிலே ரூசிபவென் என்னுமிடத்தில் அடைக்கப்பட்டிருக்கும் பிறிட்டிஷ் மறியற்காரரின் சாப்பாட்டை அரைவாசிவரை ஜர்மனியரிப்போது குறைத்திருக்கின்றனரெனச் சொல்லப்படுவதால ஜாமனியர்மேற் குறித்த இடங்களிலுள்ள பிறிட்டிஷ் மறியற்காரரை இங்கிலாந்திலுள்ள ஜர்மன் மறியற்காரரோடு மாற்றிக்கொள்ளவேண்டும் அங்ஙனஞ்செய்ய அவர்களுடன்படாத பட்சத்தில் ஜர்மன் மறியற்காரரின் உணவும் குறைக்கப்படுமெனத் தெரிவித்தனர்.

அவுஸ்திரேலியாவில் ஏராளமாக விளைந்திருக்கும் கோதுமையை ஏற்றுமதிசெய்யக் கப்பல்சன குறைவாயிருப்பதால் அவுஸ்திரேலிய அரசாட்சியார் 1,30,000 பவுண் செலவழித்து 15 கப்பல்களை விலைக்குவாங்கி அத்தானியத்தை ஏற்றுமதி செய்ய ஒழுங்குசெய்திருக்கின்றனர்.

பெல்ஜியக்கரையில்நிற்கும் ஜர்மன் கப்பல்கள் மீது மூன்று பிரான்சிய ஆகாயக்கப்பல்கள் 65 குண்டுகளைப் பொழிந்தன.

மத்தித்தரைக்கடலிலே 'பூனெல்' என்னும் பிரான்சுக்கப்பல் நீரிலமிழ்த்தப்பட்டது. 'விலவிட மெடிமிற்' என்னும் பிரான்சுக்கப்பலை ஓர் சப்மெறயின் கப்பல் தூரத்திச் சென்றபோது அது தப்பி ஓடிவிட்டது.

ஜூன்மூ 28உ.

அமெரிக்க துறைமுகங்களில் நிற்கும் ஐக்கிய அரசினரின் கப்பல்களை உடைத்துவிட அமெரிக்காவிலுள்ள ஜர்மனியர் சதியாலோசனை செய்கின்றனரெனச் சேர். எட்வேட்கிறேய் அமெரிக்க அரசாட்சியாருக்கு எழுதியிருக்கின்றனர்.

வேர்டனில் நடக்கும் யுத்தத்தின் மும்முரம் சொல்லற்கரிதென்றும் இளவரசரின் சேனையிலிருந்து ஒருவனுவது எடுக்கப்பட்டு வேறஇடத்துக்கு அனுப்பப்படவில்லையென்றும், ஆனுல், அவருக்குத் துணைச்சேனைகளும் முன் பாவிக்கப்படாதபெரும் பீரங்கிகளும் அனுப்பப்படுகின்றனவென்றும் ஓர்ஜர்மனியன் ஓர் பத்திரிகைக்கு எழுதியிருக்கின்றனரெனச் சொல்லப்படுகின்றது.

ஆமேனிய இராணியும் குடும்பமும் பேர்லின் நகருக்குப் போய்விட்டதாக புக்கேறெஸ்ற் என்னுமிடத்திலிருந்து வரும் புதினங்களால் தெரியவருகின்றது.

ஜூன்மூ 29உ.

அயர்லாந்து தேசத்திற்கு யுத்தகருவிகளை எற்றிச்சென்ற கேஸ்மென்ற் என்பவர் மரணத்திர்ப்புப் பெற்றனர்.

தென்னணியில் ரூஷியர் 221 உத்தியோகத்தர்களையும் 20,285 பேரையும் சேர்த்து மறியற்காரராகப் பிடித்தார்கள்.

தயமொன்ற் என்னுமிடத்திற்கு வடகிழக்கில் ஜர்மனியர் எதிர்த்து யுத்தஞ்செய்தபோது சேதமுற்றுப் பின்காட்டினர்.

ரூஷியர் கொக்கேஷியஸ் நாட்டிலே ரூபியா வாவிக்குத் தெற்கிலும், பக்டாட் பக்கத்திலும் துருக்கியரைப் பின்னிடச் செய்தனர்.

மத்தித்தரைக் கடலிலே 'பீத்திரூ வயிற்' என்னும் அமரிக்க கப்பலை நீரிலமிழ்த்தியதைப் பற்றிக் கடிந்து அமரிக்க அரசினர் அவுஸ்திரிய அரசினருக்கு எழுதி அக்கப்பலை நீரிலமிழ்த்திய சப்மறயின் கப்பலின் தலைவனைத் தண்டித்து நட்டஈடு கொடுப்பதுடன் மன்னிப்புக் கேட்கவேண்டுமெனவும் கேட்டுஇருக்கின்றனர்.

சுறிச்சல் என்னுமிடத்தில் பிடிக்கப்பட்ட அமரிக்க சேனுவீரர் விடுபட்டபடியால் அமெரிக்காவுக்கும் மெக்சிக்கோவுக்குமிடையில் யுத்தம் நிகழாது சமாதான முண்டுபடுமென எண்ணப்படுகின்றது.

ஜூன்மூ 30உ.

ஜர்மனியர் மேற்கிலிருந்தாவது கிழக்கிலிருந்தாவது சேனைகளையெடாமல் அங்கங்குள்ள சேனைகளை அங்கங்கேயே நிறுத்திவைத்திருக்கிருர்களென்றும், அவர்களிடம் பெலமுன சேனை இருக்கின்றதென்பதை மறந்துபோகக்கூடாதென்றும், இறந்துபோகும் சேனுவீரரினிடங்களை நிரப்பச் சேனை இருந்தாலன்றி ஜர்மன் சேனுவீரர் வேர்டனிற்போலத் தங்கள் சேனைகளை மாளக்கொடுக்க மாட்டார்களென்றும், அரண் செய்யப்பட்ட இடங்களைத் தாக்கத்தக்க ஆயுதமின்றிக் காலாட்படையை அவர்களொருபோது மனுப்பமாட்டார்களென்றும் ஓர் பத்திரிகை நிருபர் கூறுகின்றனர்.

கொல்மியாவென்னுமிடத்தை ரூஷியர் பிடித்தார்களெனச் சொல்லப்படுகின்றது.

ஜர்மனியர் அகூட்டுச்கும் 304-ம் மலைக்குமிடையில் மும்முரமாய்க் குண்டுப் பிரயோகஞ்செய்து நெருப்புத்தண்ணீரை வீசிஞர்கள். ஆனுல் பிரான்சியரின் குண்டுகளுக்கிலக்காகி அதிக சேதமுற்றுப் பின்காட்டினர். 304-ம் மலைக்குக் கிழக்கே அநேகமுறை அவர்கள் எதிர்த்து யுத்தஞ்செய்து பிரான்சு முன்னணியில் ஓர் அரண்செய்யப்பட்ட இடத்தைப் பிடித்தார்கள். இங்கே நின்றவர்கள் குண்டுகளுக்கிரையாஞர்கள். ஆயினும் பிரான்சியர் திரும்ப யுத்தஞ்செய்து அந்த இடத்தைப் பிடித்தார்கள்,

மேற்குயுத்தபூமிக்கு ஜர்மனியர் தூரத்துக்குப் பிரயோகிக்கக்கூடியனவும் மிக்க பெலனுடையனவுமாகிய பீரங்கிகளைக் கொண்டுவந்திருக்கின்றனரென ஓர் பத்திரிகை கூறுகின்றது.

ஜூலைமூ 1உ.

பிரிட்டிஷ்சைநியமும் பிரான்சுச்சைநியமுஞ் சேர்ந்து ஜர்மனியரைஎதிர்த்து யுத்தஞ்செய்கின்றன. பிரிட்டிஷ்சைநியம் 16 மைல் தூரத்துக்கு ஜர்மன் முன்னணியிலுள்ள சிலவிடங்களுட்புகுந்தது. பிரான்சியர்பிரிட்டிஷ்சைநியத்துக்கு வலப்பக்கத்தில் நின்று அதிக திறமையுடன் யுத்தஞ்செய்கின்றனர். பிரிட்டிஷ் வேவுசேனை அனேக இடங்களில் ஜர்மன் அகழ்களுட் புகுந்து பலரைக் கொன்று பலரை மறியற்காரராகப் பிடித்தது. பிறிக்கூட்டுக்கு வடக்கே பிரிட்டிஷ்காரர் சில இடங்களைப் பிடித்தார்கள். அக்கிராமம் இன்னும் ஜர்மனியர் கையிலேயேயிருக்கின்றது. பிரிட்டிஷ்சைநியம் மிக்க தைரியத்தோடும் யுத்தஞ்செய்து ஜர்மன் முன்னணியில் பலரைக் கைதிகளாகப்பிடிக்கின்றது. யுத்தம் இன்னும் இங்கே நடைபெறுகின்றது.

மியூசுக்கு இடப்பக்கத்தில் சத்துருக்கள் நான்குமுறை எதிர்த்து யுத்தஞ்செய்தார்கள். மூன்றுமுறை அவர்கள் அதிக சேதமுற்றுப் பின்காட்டினர். நான்காம்முறை பிரிட்டிஷ்காரர் முதலுட் பிடித்த ஓர் அணையும் 304-ம் மலைக்குக் கிழக்கிலுள்ள அகழ்களையும் பிடித்தார்கள். ஆனுல் உடனே பிரான்சுக்காரர் திரும்ப யுத்தம் செய்து முன் இழந்த இடங்கள் எல்லாவற்றையும் பிடித்தார்கள்.

வலப்பக்கத்தில் தயமொன்ற் என்னுமிடத்தைப் பிடிப்பதற்கு பெரும் யுத்தம் நடந்தது. பலமுறை எதிர்த்தபின் ஜாமனியர் இப்போது முழுதும் அழிக்கப்பட்டுப்போன ஓர் கோட்டையைப் பிடித்தார்கள்.

ஜூலைமூ 2உ.

பிரான்சியரும் பிரிட்ஸ்காரரும்சேர்ந்துயுத்தம் செய்து பிரிட்டிஷ்காரர் 3,500 பேரைக் கைதிகளாகப்பிடிக்கப் பிரான்சுக்காரர் தயமொன்ற்கோட்டையைப் பிடித்தார்கள்.

ரூஷியர் நீஸ்றர் ஆற்றுக்குத் தெற்கே சத்துருக்களைத் தூரத்திச் சென்று கொலோமியா என்னுமிடத்துக்கு வடக்கே பல இடங்களைப் பிடித்தார்கள். ஜூன் மீ 4உக்கும் 30உக்குமிடையில் பிடிக்கப்பட்டமறியற்காரரின் தொகை 2,17,000.

போல்றிக்கடலிலே ஜர்மன் கப்பல்களும் ரூஷியக்கப்பல்களுஞ் சந்தித்துச் சண்டைசெய்தன. ரூஷியர் ஜர்மன் கப்பல்கள் தூரத்தப்பட்டனவெனச் சொல்ல ஜர்மனியர் ரூஷியரின் கப்பல்கள் தூரத்தப்பட்டனவெனச்சொல்லுகின்றனர்.

ஜூலைமூ 3உ.

யுத்தம் மும்முரமாய்நடைபெறுகின்றது. லேபொயிசல் என்னுமிடத்தில் எதிர்க்கின்ற ஜர்மன் சேனுவீரர் தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். வேறிடங்களிலும் பிரிட்டிஷ் பிரான்சிய சைநியம் முன்னேறிச் சென்று சத்துருக்களின் அரண்கள் சிலவற்றைப் பிடித்தன.

அன்கர் என்னுமிடத்துக்குத்தெற்கே அகோர யுத்தம் நடைபெறுகின்றது. ஆனுல் பிரிட்டிஸ் பிரான்சிய சைநியங்கள் தாங்கள் பிடித்த இடங்களைப் பெலப்படுத்திநிற்கின்றன.

லேபொயிசெல் ஒவில்லியேர்ஷ் என்னுமிடங்களிலேயே பெரும் யுத்தம் நடைபெறுகின்றது.

பிரிட்டிஷ் அணி நெடுக யுத்தம் மும்முரமாய் நடக்கின்றது. அன்கர் ஆற்றுக்குமேலே ஒரு மாறுதலுமில்லை.

தெயிபல்லே பொயிசி என்னுமிடங்களில் பிரிட்டிஸ்காரர் குண்டுகளைப் பொழிந்தார்கள்.

பிறிக்கூட்டுக்கு வடக்கில் மும்முரமான யுத்தம் நடைபெற்றது. பிரிட்டிஸ்காரர் முன்னேறி உயர்ந்த ஸ்தானத்தில் நிற்கிருர்கள்.

மொன்தோபன் என்னுமிடத்தை ஜர்மனியர் குண்டுகளால் தாக்குகிருர்கள்.

இதுவரை 4000 ஜர்மனியர் மறியற்காரராகப் பிடிக்கப்பட்டார்கள்.

ஜூலைமூ 4உ.

லேபொயிசிக்கும் தீப்வலுக்கு மிடையில் ஒரு கால்பிரிட்டிஷ்காரரும் மற்றொருகால் ஜர்மனியரும் வெற்றியடைந்து நிற்கின்றனர். தீப்வலுக்குத் தெற்கே சத்துருக்கள் பிரிட்டிஷ் சேனுவீரரை அவர்கள் முன்னிட்டுச் சென்றிருந்த சில இடங்களிலிருந்து தூரத்திஞர்கள்.

ஜர்மனியர் வேர்டனில் சண்டை செய்தது போலவே பிரிட்டிஷ்காரர் இப்போது சண்டை நடத்துகிருர்கள். ஜர்மனியர் குறித்த நேரத்தில் ஓர் குறித்தஇடத்திலேயே மும்முரமான யுத்தஞ்செய்தார்கள். ஆனுல் பிரிட்டிஸ்காரர் அணி நெடுக எதிர்த்து யுத்தஞ்செய்கிருர்கள்.

## கடிதம்.

### பௌதிகசாத்திரிப் பட்டம்பெறக் கத்தோலிக்கர் ஒருவர் படும்பாடு.

ஐயா,

பௌதிக சாத்திரிகளிற் சிலர் எழுதிய புத்தகங்களிற் சில பக்கங்களை வாசித்துவிட்டு நமது கத்தோலிக்க சிநேகிதர் ஒருவர் அச்சாத்திரக் கொள்கைகளைக் கண்ட இடமெல்லாம் கொண்டிழுத்துப் பெரிதும் அவலப்படுகிருர்.

விநாயகக் கடவுளை ஒரு யானைத் தெய்வம் என்று சுட்டிவிடுதற்காக, யானைக்குப் பிரீதியான பொருள் தேங்காய் என்றும், இத்தேங்காய் அவருக்கு உடைக்கப்படுவதால் அவர் ஒரு யானையே என்றும் சூச்சுமக்கி ஊகிக்கிருர்.

தேங்காயில் அவருக்குப் பிரீதி யுண்மைபற்றியே அத்தேங்காய் அவர்க்குப் பலியிடப்படுவதாயின், யோகோவாவுக்கு நரமாமிசத்திற் பிரீதியுண்மைபற்றியோ அவருக்கு நரபலியிடப்பட்டு வந்தது?

நமதுநண்பர் இதனையும் சிறிது ஊகிப்பாராக.

சமயப் பிரியன்.

### நரவணக்கம்.

இந்துசாதன பத்திராதிப,

விநாயகக்கடவுளுக்கு யானைமுகம் உண்மையால், விநாயக வணக்கம் மிருக வணக்கமாம். யேசுக்கிறிஸ்து முற்றும் மானுடனே யாகவும், அவரை வணங்கும் வணக்கம் நரவணக்கம் அல்லவாம்.

கிறிஸ்து மனுஷனுகவே மாதா வயிற்றிற் பிறந்து, மனுஷனுகவே உண்டு உடுத்து வளர்ந்து, மனுஷனுகவே பசி தாகங்களால் வருந்தி, மனுஷனுகவே இரத்தஞ்சிந்தி இறந்திருப்பவும் அவர் மனுஷன் அல்ல, தேவனும். விநாயகக் கடவுள் எங்கேயாவது மாதாவயிற்றிற் பிறந்தார் என்ருவது, எங்கேயாவது பசிதாகங்களால் வருந்தினுர் என்ருவது, எங்கேயாவது இரத்தஞ் சிந்தி இறந்தார் என்ருவது ஒரு சொல்லாயினும் சொல்லப்படாதிருக்கவும் அவர் மிருகத்தெய்வமாம்.

கிறிஸ்துவை நாகரிகம் உள்ள உலகம் முழுதும் கடவுள் என்று கைக்கொள்வதனுல் அவர் கடவுளாம்! நாகரிகமுள்ள உலகம் முழுதும் குடிவகைகளைக் கைக்கொள்வதால், அந்தக் குடிவகைகளையும் தெய்வமாக நமது நண்பர் கொள்வார்போலும். இனி நாகரிகமுள்ள தேசங்களில் எத்தனையில் ஒரு பாகம் கிறிஸ்துவைக் கைக்கொள்கின்ற தென்பதை இவர் பள்ளிக்கூடச் சிறுவர்களிடத்துக் கேட்டுப் படித்துக் கொண்டால் நல்லது. கிறிஸ்து பிறக்க முன் தொட்டு நாகரிகத்திற் பெருஞ் சிறப்புவாய்ந்த இந்தியா முழுதும் விநாயக கடவுளைக் கைக்கொண்டு வணங்கும் என்பதை இவருக்குச் சொல்லிக்காட்டுவோர் ஒருவரும் இல்லைப்போலும்?

கிறிஸ்து தமது செயலாலும் சொல்லாலும் தம்மைக் கடவுள் என்று காட்டினுராம். கிறிஸ்து செய்த தேவச் செயல்களுள் ஒன்று அவர் சிலுவையில் அறையுண்டு வாதையுற்று இறந்தது போலும்! இவர் சொல்லிய சேவகங்களில் ஒன்று தாம் கடவுள் அல்ல என்று சனங்களுக்குச் சொன்னது போலும்!

விநாயகக்கடவுள் முழுமுதற்கடவுள் என்பது அவர் காட்டிய விசுவரூபத்தாலும் அவர் உண்மைப் பொருளை மெய்யடியார் பலர்க்கு உபதேசித்த உபதேசமொழிகளாலும் நாம் எல்லாம் நன்கறியக் கிடக்கின்ற தென்பதை இவர் அறியார்போலும்.

வி[illegible]ன்,

# விளம்பரம்

ஓடுகளும் சீமெந்தும்



பெருந் தொகையான ஓட்டு மார்க்குச் சீமெந்தும், பேர்பெற்ற மங்களூர் ஓடுகளும், இரட்டை யானை மார்க்கு ஓடுகளும் விலைக்கிருக்கின்றன. வந்து பாருங்கள்.

யோசேப் அன் கம்பெனி,
தேவரீர்க் குளத்துக்கு முற்பக்கம்,
யாழ்ப்பாணம்.

## விஜய சீலம்.

மேற்கண்ட பெயரினையுடைய ஒரு சிறந்த நவீன கதை, "வீரசிங்கன் கதை" "உதிர பாசம்" முதலியவற்றின் ஆசிரியராகிய சி. வை. சின்னப்பாபிள்ளையவர்களால் சாதாரண வசனரூபமாக இயற்றப்பட்டு வெளிவந்திருக்கின்றது. இதன் பெருமை இதனை வாசிப்போர்க்கே நன்கு விளங்கும்.

வண்ணை ஸ்ரீ சண்முகநாத அச்சியந்திரசாலையிலும் வண் கிழக்கு சி. வை சின்னப்பாபிள்ளையிடத்திலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

விலை பிரதி க-க்கு ரூபா க.

இலங்கை, இந்தியா தபாற் செலவு சதம் கசு.
தொடுவாய்ப்பகுதிக்கு ,, ,, உடு.

## புதிய கையொப்ப நேயர்கள்.

எமது பத்திரிகைக்குப் புதிய கையொப்ப நேயர்களாகச் சேர விரும்புவோர் ஒருவருடப் பத்திரக்கிரயத்தை முற்பணமாக அனுப்பிப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

"இந்துசாதன" ம்னேசர்.

## சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளுமிதனால் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே யிப்போது இந்தலேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, ருமாஸ்தகா, பீதாலு, சாவாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அபரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாயபிராணிப்பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலி வகைகள் சேர்த்துச் செய்யயபட்டிருக்கிறது.

இதனால் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பககவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை இறாத்தல் ஒன்றுக்கு ரூபா உ0 அரைறாத்தலுக்கு ரூபா ௧0 கால் றாத்தலுக்கு ரூபா ரு. தபாற் செலவு பிரத்தியேகம்.

விலாசம்:—

க. ஆறுமுகம்பிள்ளை,
ஆயுர்வேத வைத்தியசாலை,
இல. 96 முதல் மருதானை,
கொழும்பு.

## இதைக் கவனியுங்கள்.

உலகமெங்கும் கியாதிபெற்றுக்கையாண்டுவரும் மருந்துகளின் விபரம்.

**1. கெர்ப்ப உற்பத்தி மூலிகை உப்பு.**

இது கெர்ப்ப ஸ்தானத்தில் சதை வளர்தல், பாசி படர்தல், காலாகாலங்களில் மாதவிடாயாகாமற் சரீரம் பருத்தும் இளைத்தும் இருத்தல், பொறுக்க முடியாத வயிற்றுவலி முதலிய காரணங்களால் கெர்ப்ப உற்பத்தி இல்லாதிருப்போர்க்கு அந்நோய்களை மாற்றிக் கெர்ப்பந் தரிக்கச்செய்யுமென்பது திண்ணம்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா ௧.

**2 தாதுவிர்த்திக்குப் பஞ்சாமிர்த லேகியம்.**

இந்த அமிர்தம்போன்ற லேகியத்தைப் பாவித்ததன்பின்பே இதன் குணம் வெளியாகும்.

உஉ நாள் மருந்தின் கிரயம் ரூ உ, அணா அ,

**3 பிரமேக வியாதிக்குச் சத்துச் செந்தூரம்.**

எவ்வித பிரமேகமும் இம்மருந்தை யருந்தினால் சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூபா உ.

**4. எவ்வித வாய்வுகளுக்குஞ் சண்டமாருதக் குளிகை.**

சரீரத்தின் எந்தஇடத்திலும் துடிக்கும்வாய்வுகளுக்கும் மற்றைஎவ்விதவாய்வுகளுக்கும் இம்மருந்தேகண்டபம். ஐந்துநிமிஷத்திற குணமாகும்.

௧௬ மாத்திரை புட்டி ஒன்று ரூ க, அணா அ.

**5. மேகசஞ்சீவிச் சூரணம்.**

மேகநோயுண்டாகியபின் காணப்படும் அரையாப்பு முதலிய சர்வரோகங்களையும் இம்மருந்து நீக்கிவிடும். ௩உ நாள் மருந்து ரூ உ.

**6. புளிப்பு மாதுளம்பழ லேகியம்.**

அன்னத்துவேஷம், பித்தச்சிறகிறப்பு, ஜீரணக்குறைவு, மலக்கட்டு இவைகளுக்குக் கைகண்ட ஒளடதம்.

கக நாள் மருந்தின் கிரயம் ரூ க, அணா அ.

**7. இளைப்புஇருமலுக்குச் சுவாசகாசச்சூரணம்**

எவ்வித இளைப்பு இருமல்களையும் அகற்றும் உஉ நாள் மருந்து ரூ உ.

**8. மூலிகை ரத்தினத் தைலம்.**

அபூர்வ மூலிகைகளாற் தயாரித்த சுகந்த பரிமளமுள்ளது. குணத்திற் சிறந்தது. மணத்தில் மிகுந்தது. ஒருமுறை அரைக்கால் ரூபாயிடை தைலத்தைத் தலைக்கிட்டுக்கொண்டால் அன்று முழுவதும் ஜிலுஜிலுப்புடனிருப்பதுமன்றி ஒரு வாரம் வரை பரிமளம் மாறாது. 8 அவுன்ஸ் டின் 1-க்கு ரூ 1.

**9. பரிமள பற்பொடி.**

பல் கூச்சம், இரத்தம் வருதல், துர்நாற்றம் இவைகளை மாற்றிப் பல் கறுக்காமல் முத்துப் போலிருந்து நறுமணங்கமழச்செய்து பல்வலியையும் 2 நிமிஷத்தில் கேட்கும்.

டப்பி 1 க்கு ரூ 0-4-0 டஜன் 1 க்கு ரூ 2-12-0.

**10. படர்மேக சங்காரி வெண்ணெய்.**

மேகநோயால் தேகத்தில்விழும் எவ்வித பத்துப் படைகளையும் ரு வேளையிற் குணமாக்கும்.

டப்பி க-க்கு அணா ௬. டஜன் க-க்கு ரூ உ, அ. அ.

எவ்வித மருந்துகளும் உபயோகிக்கும் விபரம் மருந்துடன் வரும்.

## தவறுதீர்கள்! இதுசமையம்!! தவறுதீர்கள்!!!
## உங்களுங்கள் அதிஷ்டத்தைப் பரீக்ஷித்துப்பாருங்கள்.

(க) ஜாதகத்தை அனுப்புங்கள். இல்லாவிடில் ஜனனவருஷம் மாசம் தேதி நாழிகை என்னும் இவைகளை அனுப்புங்கள். இல்லாவிடில் இது பார்த்தவுடன் இதனடியிற் குறித்துள்ளவைகளில் எந்தப்பாகம் வேண்டுமோ அந்தப்பாகம் வரைந்தனுப்பினால் இன்னின்ன காலத்தில் இன்ன வயதுக்குள் இன்னவை கிட்டும் கிட்டாதெனவும் கடிதம கிடைத்த நேரத்தைக் கொண்டு இன்னவிதமுடிவுபெறுமென்று சண்முகநாதன் திருவருளால் வரைந்தனுப்புவோம்.

(உ) க. ஆயுட்பாகம், உ. எந்தவிதத்தினால் தனங்கிடைக்கும், ௩. கல்யாணம் சொந்தமா, ௪. களத்திரபாகம் எத்தனை, ரு. அது முனனு பின்னு, ௬. புத்திரனுண்டா, எ. தனம் வைத்துப் போவேனு, அ. மரணமாகுமிடம் சுயதேசமா, ௯. சொந்தவீடு நிலம கிட்டுமா, க0. கடன் எப்போது நிவிர்த்தியாகும, கக. விவகாரம ஜெயமாகுமா, கஉ. நினைத்தகாரியம முடியுமா.

தனி ஒருபாகம் சார்ஜ் ரூ க.
முழுத்தொகையும் அனுப்பவேண்டும்.
கஉ பாகம் சார்ஜ் ரூ ரு.

பாதிச்சார்ஜ் முற்பணமாக அனுப்புவோர்க்கு வீ. பி. போஸ்தில் அனுப்புவோம்.

விபரந்தெரியவிரும்புவோர்விலாசம எழுதினாற் ஜோதிஷ, வைத்திய "கியாட்லாக்" இனாமாக அனுப்புவோம.

வீ. பீ. சார்ஜ் பிரத்தியேகம்.

K. V. கோவிந்தசாமிநாயுடு,
ஜோதிஷம்,வைத்தியம்,
மேலைச் சித்திரவீதி,
மதுரை.

☞ இவைகளுக்கு எழுதுவோர் இப்பத்திரிகையைக் குறிப்பிட்டுக் காட்டவும்.

## பனார்ஸ் பட்டுச்சேலை.

1. சிகப்பு, ரோஸ், பச்சை, புளு, ஊதா, வெளுர்ரோஸ், வெளுர்பச்சை, லைட்புளு, பின்கலர் இன்னும் பலமாதிரி நிறங்களில் உடல் பூராவும் பட்டில் பலவித பூ கொடி வேலைகள் செய்த சரிகை பனார்ஸ் கரை பனார்ஸ் முந்தி 16 முளம் சேலை ரூ 23 முதல் 25 வரை.

2. மேற்படிகரையில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்ட 16 முளம் சேலை ரூ 30 முதல் 35 வரை.

3. மேற்படி சரிகை பனார்ஸ்கரை உடல் பூராவும் சரிகைமத்தாப்பு பெரிய கொட்டடி 16முளம் சேலை ரூ 35 முதல் 40 வரை.

4. மேற்படி உடலில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்டது 16 முளம் சேலை ரூ 40 முதல் 45 வரை.

5. மேற்படி சரிகை பனார்ஸ்கரை உடல் பூராவும் சரிகைமத்தாப்பு சன்னக் கொட்டடி 16 முளம் சேலை ரூ 45 முதல் 50 வரை.

6. மேற்படி உடலில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்டது 16 முளம் சேலை ரூ 50 முதல் 55 வரை.

7. மேற்படிசரிகை பனாஸ்கரையில் உடல் பூராவும் சரிகை நக்ஷத்திர புட்டா போட்ட 16 முளம் சேலை ரூ 45 முதல் 50 வரை.

8. மேற்படி நிறம் சரிகை மத்தாப்புக்கரையில் மத்தாப்பு முந்திபோட்ட 16 முளம் சேலை ரூ 30 முதல் 35 வரை.

9. மேற்படி நிறம் சரிகை மத்தாப்புக்கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்ட 16 முளம் சேலை ரூ 35 முதல் 40 வரை.

10. மேற்படி மத்தாப்பு சரிகை கரையில உடல் பூராவும் சன்னமாக மத்தாப்பு சரிகை கொட்டடி 16 முளம் சேலை ரூ 55 முதல் 60 வரை.

11. மேற்படி கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்ட 16 முளம் சேலை ரூ 60 முதல் 65 வரை.

12. மேற்படி சாதா பனார்ஸ்கரையில் உடல் பூராவும நெருக்கு ஊசி வாணம் மத்தாப்பு சரிகை கொட்டடி 16 முளம் சேலை ரூ 75 முதல் 80 வரை.

# சகாயவிலை! சகாயவிலை!!
# கல்யாண பட்டுச் ஜவுளிகள்.
## இந்தியர்களால் தயார் செய்யப்பட்டது.
## நம்பிக்கையும் நாணயமும் நயமுமுள்ள தினுசுகள்.

குறிப்பு.

மதுரையிலிருக்கும், மு. க. ராமய்யர் அன்சன்ஸ் ஜவுளி கம்பனியென்றால் உலகம் பூராவும் நன்றாய் அறிவார்கள். அனுபவம் பெற்றுத் தேர்ந்த நெசவுகாரர்களால் தயார்செய்து வருகின்ற விசேஷமான ஜவுளித் தினுசுகள்.

பாவிப்புக்கும் சலவைக்கும் பரிசுத்தமாகவும், அலாம்பரமாகவும் விளங்கும்படியான மிகவும் உயர்ந்த சரிகை, சாயம், பட்டு நூல்களில் தயார் செய்யப்படுகின்றது.

ஒருமுறை எங்கள் கம்பேனி ஜவுளிகளைப் பாவித்தவர்கள் எப்போதும் எங்கள் ஜவுளிகளை உபயோகிக்க மனமுள்ளவர்களாயிருப்பார்கள்.

கல்யாணச்சடங்கு முதலிய விசேஷகாலத்தில் உபயோகிக்கும்படியான மேன்மைபெற்ற பட்டுச் ஜவுளிகளும் சாதாரணமாக எப்போதும் பாவிக்கக்கூடிய பலமாதிரி நூதன ஜவுளிகளும் ஏராளமாய்த் தயார்செய்யப்படுகின்றது. கொழும்பு, கண்டி, காலி, மட்டக்களப்பு, திரிகோணமலை, யாழ்ப்பாணம் ரெங்கூன், பினாங்கு, சிங்கப்பூர், கோலாம்பூர்முதலிய அனேக இடங்களிலிருக்கும் வியாபாரிகளுக்கும், கம்மிஷன் ஏசண்டுகளுக்கும சொந்தப்பாவிப்புக்காரர்களுக்கும உத்தியோகஸ்தர்களுக்கும் பிரபுக்களுக்கும் தோட்டதுறை கங்காணி கணக்கப்பிள்ளை கண்டக்டர் முதலிய யாவர்களுக்கும் எங்கள் கம்பேனி ஜவுளிகள் ஏராளமாய் அனுப்புகிறோம.

இதுவரையிலும் எங்கள் கம்பேனியில் ஜவுளிகள் வாங்கி வருகின்றவர்களும் இனிமேல வாங்குகிறவர்களும் அவரவர்கள் வளவிலும் அவரவர்கள் சொந்தக்காரர்கள் வளவிலும் சிநேகிதர்கள வளவிலும் இப்போது நடக்கப்போகிற கல்யாணச் சடங்குகளுக்கும் முக்கியமாய்த் தேவையான கூறைப்புடவைகளும், நவுக்கைகளும, சால்வைவேட்டிகளும், இன்னும் பலமாதிரித் தினுசுகளுக்கும முன்னாடியே எங்கள் கம்பேனிக்கு ஆடர்கொடுத்து விருப்பமுள்ள தினுசுகள பெற்றுக்கொணடு பெரும் லாபமும நயமும அடையவேண்டியது.

சில கூறைப் புடவைகளின் விலைகளும் தினுசுகளின் விபரமும் இதில் தெரிவித்திருக்கிறது மற்றத் தினுசுகளின் விபரங்கள தெரிந்துகொள்ளவேண்டியவர்கள் கடிதமூலமாக விலாசந் தெரிவித்தால் கேட்லாக் இனாமாக அனுப்பக்கூடும.

வியாபாரிகளுக்கு மொத்தமாகவும் சில்லறையாகவும் சகாயவிலைக்குத் தேவையுள்ள தினுசுகள் அனுப்பக்கூடும.

இலங்கை, பர்மா, சிங்கப்பூர், பினாங்கு முதலிய இடங்களுக்குச் ஜவுளிகள் தபால் வீ பி. பார்சலாக அனுப்பக்கூடும்.

F. M. S. சைச்சேர்ந்த கோலாலம்பூர் முதலிய இடங்களுக்குச் ஜவுளிகள் பாங்குமூலமாய் அனுப்பக்கூடும.

### முக்கிய கவனிப்பு.

தேவையான நிறங்களும், விலையும், நம்பருங்கண்டு விபரமாய் எழுதவேண்டியது.

## (தொடர்ச்சி.)

13. மேற்படி கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்டு மேற்படி உடல் சரிகைகொட்டடி 16 முளம் சேலை ரூ 80 முதல் 85 வரை.

14. மேற்படி கரையில் ரெட்டக்கரையாகவும் கரைக்குக் கொடிபேட்டுகள் வைத்த உடல்சரிகைகொட்டடி 16முளம் சேலை ரூ 85 முதல் 90 வரை

15. மேற்படிமாதிரிக் கரையில் உடல் பூராவும் சரிகை ரெட்டக்கொட்டடி நெருக்கு ஊசி வாணக்கொட்டடி 16 முளம சேலை ரூ 100 முதல் 120 வரை.

16 மேற்படி கரையில் உடல் பூராவும் சரிகைஜோட்பபளிவாணத்தார் கொட்டடி 16முளம்சேலை ரூ 120முதல் 150வ.

17. மேற்படி ஒற்ற பனார்ஸ் கரையில் உடல் சரிகை கொட்டடியில்சரிகை புட்டா சேலை ரூ 75 முதல் 80 வரை,

18. மேற்படிமாதிரிஉடலில் கரைக்கு ரெட்டக் கரையாகவும் கொடிபேட்டுகள் வைத்த சேலை ரூ 100 முதல் 120 வரை.

19. காஸ்மீர் பட்டில உடல் சாதா கரைக்கும் முந்திக்கும சரிகைவேலை செய்த ரோஸ், சிகப்பு, பச்சை, ஊதா நிறமுள்ள சேலை ரூ 20 முதல் 25 வரை.

20. மேறபடி உடல் சரிகை புட்டா சேலை ரூ 27 முதல 35 வரை.

## (கொர் நாட்டுப் புடவை.)

2 . மேற்படிநிறங்களில் உடல் சாதா முந்தி சரிகைவேலை மானம் சேலை ரூ 17 முதல் 20 வரை.

22. மேற்படி சரிகை ருத்திராக்ஷக் கரைச் சேலை ரூ 20 முதல் 25 வரை.

23. மேற்படி சாதாக்கரையில் உடல் சரிகைகொட்டடிசேலை ரூ 25 முதல் 30வ.

24. மேற்படி சரிகை ருத்திராக்ஷக் கரையில் உடல் சரிகை கொட்டடி சேலை ரூ 35 முதல் 40 வரை.

25. உடல் மஞ்சள் நிறம் ஜோட்டு பப்ளி, வைடூரிய பப்ளி, கூறை முகி சேலை ரூ 15 முதல் 25 வரை.

26. மேற்படி சுத்தப்பட்டு நயம் கொட்டடிசாயச்சேலை ரூ 25முதல் 30வரை.

27. மேற்படி கரைக்கும முந்திக்கும் சரிகைபோட்டசேலை ரூ 30மு. 35வரை.

மு. க. ராமய்யர் அன்சன்ஸ், மேலக்கோபுரவாசல்,
போஸ்ட் நம்பர் 48 மதுரை, தென் இந்தியா.

M. K. Ramier and Sons. West Tower St.
Post No. 48 Madura, South India.

வான்முகில்வழாதுபெய்கமலிவளஞ்சுரக்கமன்னன்; கோன்முறையரசுசெய்ககுறைவிலாதுயிர்கள்வாழ்க, நான்மறையறங்களோங்கநற்றவம்வேள்விமல்க, மேன்மைகொள்சைவநீதிவிளங்குகவுலகமெல்லாம்.

☞ Printed and published by S. KandiahPillai, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.